DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI
Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.
Judicial Magistrate, Manapparai

Date: 22.07.2026

STC No.74/2024

சாட்சி :PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. கங்காதரன் | ஜாதி | : |
| த/பெ/க/பெ. | : திரு. அசோக்மோகன் | தொழில் | : பேங்க் மேனேஜர் |
| கிராமம் | : புதுக்கோட்டை | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : 43/2026 |

( எதிரி ஆஜர் இல்லை, வழக்கறிஞர் ஆஜர்)

---------------------------------------------------------------

**புகார்தாரர் தரப்பு முதல் விசாரணை**

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரப்பெற்றது. கடந்த 15.07.2024-ம் தேதியன்று என்னால் அலுவலக வேலை நிமித்தம் காரணமாக வர இயலவில்லை. அதனால் இன்று ஆஜராகி சாட்சியம் அளிக்கின்றேன். அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். தனபால் என்பவரது 01.12.2023 to 31.03.2024 வரையில் உள்ள Current Account Statement கொண்டு வந்துள்ளேன். மேலும், காசோலை திருப்பப்பட்டதற்கான காரணத்திற்கான Account wise return Statement கொண்டுவந்துள்ளேன் மற்றும் தனபால் என்பவரின் Specimen Signature ஐ காட்க்கூடிய ஆவணத்தினை கொண்டுவந்துள்ளேன். மேற்கண்ட ஆவணங்கள் முறையே **ம.சா.ஆ.8 முதல் ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 காசோலையானது எதிரியின் வங்கி கணக்குடைய காசோலை என்றால் சரிதான். எதிரி எனது வங்கியில் எத்தனை வருடமாக கணக்கு வைத்துள்ளார் என்றால் 2021 லிருந்து கணக்கு வைத்துள்ளார். இந்த வழக்கிற்கு பின்னிட்டு இந்த வங்கி கணக்கானது முடிக்கப்பட்டுவிட்டது. வழக்கு காசோலையில் உள்ள கையெழுத்து எதிரியின் கையெழுத்தா என்றால் வேறுபாடு உள்ளது. இந்த வழக்கு தவிர எதிரியின் வங்கிக்கணக்கு சம்மந்தமாக நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேனா என்றால் வரவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தற்போது தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.8 ஆவணமானது காசோலை திருப்பப்பட்டதற்கான காரணத்திற்கான Account wise return Statement என்றால் சரிதான். அதில் 33 Rejected Code என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த 33 Rejected Code என்னவென்றால் சிதைக்கப்பட்ட காசோலை (Mutilated Cheque) என்றால் சரிதான். அவ்வாறு 33 Rejected Code என்றால் நிராகரிக்கப்படும் காசோலை என்றால் சரிதான். இந்த வழக்கு காசோலையை பொறுத்தவரை எங்களது வங்கி பணம் செலுத்தும் வங்கி என்றால் சரிதான். அதனால்தான் எங்களது வங்கி இந்த காசோலையை பணம் செலுத்தப்படாததாக திருப்பி அனுப்பிவிட்டது.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 22.07.2026 | |
| STC No.74/2024 | |
| சாட்சி :PW3 | |
| பெயர் : திரு. M. சரவணக்குமார் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. மாயாண்டி | தொழில் : துணை மேனேஜர் |
| கிராமம் : திண்டுக்கல் | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 31/2026 |
| ( எதிரி ஆஜர் இல்லை, வழக்கறிஞர் ஆஜர்) | |

---

**புகார்தாரர் தரப்பு முதல் விசாரணை**

நான் சிட்டி யூனியன் வங்கி, மணப்பாறை கிளையில் துணை மேலாளராக பணிபுரிந்து வருகின்றேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரப்பெற்றது. கடந்த 15.07.2024–ம் தேதியன்று என்னால் அலுவலக வேலை நிமித்தம் காரணமாக வர இயலவில்லை. அதனால் இன்று ஆஜராகி சாட்சியம் அளிக்கின்றேன். அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். ஆசிக் அலி என்பவரது 11.12.2023 to 14.12.2024 வரையில் உள்ள Salary Savings Account Statement கொண்டு வந்துள்ளேன். அது ம.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. காசோலை திருப்பப்பட்டதை காட்டக்கூடிய Return Memo (Insufficient Funds) அது ம.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

பொதுவாக காசோலை எங்களது வங்கிக்கு வசூலுக்கு வந்தால் காசோலை வரைந்தவரின் வங்கிக்கு அனுப்பப்பட்டு, திருப்பப்படும்பட்சத்தில் என்ன காரணத்திற்காக காசோலை திருப்பப்பட்டது என்ற விவரத்தை காசோலை வரைந்தவரின் வங்கி எங்களது வங்கிக்கு தெரிவிக்கும் காரணத்தின் அடிப்படையிலேயே காசோலை ரிட்டன் செய்யப்படும் என்றால் சரிதான். அதுதான் நடைமுறை என்றாலும் சரிதான். அவ்வாறு இந்த காசோலையானது காசோலை வரைந்தவரின் வங்கியால் Rejected Code 33 (Mutilated Cheque) என்ற வகையில் திருப்பப்பட்டது என்றால் தவறு. எங்களுக்கு Centralized Clearing Cell –

லிருந்து வந்த தகவலின் அடிப்படையில் Funds Insufficient எங்களது வங்கியால் திருப்பப்பட்டது. பொதுவாக வசூலுக்கு தாக்கலாகும் அனைத்து காசோலைகளும் சம்மந்தப்பட்ட வங்கிக்கு அனுப்பி வைக்கப்படுமா என்றால் அனுப்பிவைக்கப்படும். அவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட காசோலை ரிட்டன் ஆகும் பட்சத்தில் அதற்கான காரணத்தை குறிப்பிட்டு, நேரடியாக எங்களது வங்கிக்கு அனுப்பி வைக்கப்படுமா என்றால் ஆமாம். அவ்வாறுதான் இந்த இந்த ரிட்டன் மெமோவும் எங்களது வங்கிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதனால் காசோலை வரைந்தவரின் வங்கி என்ன காரணம் சொல்லி ரிட்டன் மெமோ அனுப்பியுள்ளது என்ற விவரமும் எங்களது வங்கிக்கு நேரடியாக தெரியும் என்றால் ஆமாம். காசோலை வரைந்தவரின் வங்கி Rejected Code 33 (Mutilated Cheque) என ரிட்டன் செய்துள்ளதை நன்கு தெரிந்துகொண்டே எங்களது வங்கி எதேச்சையாக, கவனக்குறைவாக Funds Insufficient என தெரிவித்து என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.12 ஆவணம் வழங்கப்பட்டுள்ளது சரியா, தவறா என்றால் சரிதான்.

Taken over by me in open court read over
to the witness and admitted by the witness
to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.